தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். இனியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசவே கூடாது என்பதற்காகத்தான் விளக்கமாகப் பதிலளித்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

பசுமை வீடுகள்

***4369—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடுதலாக பசுமை வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எனது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி, பதிலைத் தொடங்குகின்றேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சொந்த நிதியிலிருந்து 260 கோடி ரூபாயை ஒதுக்கி, 10,000 பசுமை வீடுகளை நெசவாளர் பெருமக்களுக்காகக் கட்டிக் கொடுத்து, பணிகள் முடிக்கப்பட்டு, அவர்கள் அந்த வீடுகளில் குடியேறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு வீடும் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 365 சதுர அடி பரப்பளவில், கட்டப்படுகின்றன. நெசவாளர் பெருமக்கள் சொந்த இல்லங்களிலே நெசவுத் தொழிலைச் செய்கிற வசதியோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பசுமை வீடுகளைச் சிறப்பாகக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

செய்யாறு தொகுதியில் 5 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கமும், 4 பருத்தி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சங்கம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவருவது சிறப்புக்குரிய ஒன்றாகும். செய்யாறு தொகுதியில் இருக்கக்கூடிய 5 கூட்டுறவுச் சங்கங்களும், கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.3.81 இலட்சம் இலாபத்தை ஈட்டியிருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 98 வீடுகளை அந்தப் பகுதியிலே கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாள் சாதனை கண்ட பொன்னாளில், நன்மைகள் பல விளைந்த நன்னாளில், முதல் பரிசாக 100 கோடி ரூபாயை நான் சார்ந்திருக்கின்ற தொகுதியான செய்யாறு SIPCOT வளாகத்திற்கு வாரி வழங்கி, 100 ஆண்டுகள் ஆட்சி நடத்தப்போகும் அறிவியல் அதிசயமே! (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதத் தலைவியே! கொடை உள்ளமும், கருணைப் பார்வையும், (மேசையைத் தட்டும் ஒலி) கூர்ந்த மதியும், உயர்ந்த உள்ளமும் கொண்ட, உலகம் வியக்கும் உன்னதத் தலைவியே! நெசவாளர்களின் நேசமே! தொழிலாளர்களின் பாசமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஏழையெளிய, கூட்டுறவு மற்றும் தனியார் கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலே, கடந்த ஆண்டு, 98 பசுமை வீடுகளைக் கட்டித் தந்ததாகக் கூறினார்கள். நான்

2016 செப்டம்பர் 1]

சார்ந்திருக்கின்ற செய்யாறு பகுதியில் நெசவாளர்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, தயவுகூர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நெசவாளர்களின் நலன் கருதி, பசுமை வீடுகள் வழங்கிய பாசத் தாய், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்புத் தாய், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம், அம்மா அவர்களால் வழங்கப்படுகின்ற பசுமை வீடுகள் திட்டத்தை விரிவுபடுத்திட வேண்டும். மானம் காக்கும் நெசவாளர்களின் மனம் நிறைந்த மக்கள் தலைவராக வாழும், எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, தனியார் நெசவாளர்களுக்கும் மற்றும் ஏழையெளிய நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற குடிசை வீடுகள் அனைத்தையும் முழுமையாக மாற்றி, அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*